04.09.2025

O.S.No. 173/2021

DW1–ராமையாத்தேவர் – த/பெ. முத்தையாத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.09.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. 16.10.2024 பி.வா.சா.ஆ.11,12 தவிர வேறு எதுவும் எனக்கு ஆதரவாக தீர்வை செலுத்தக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரிதான். வாதியின் இடத்தை ஒட்டி முள்வேலி அமைத்துள்ளேன் என்றால் சரிதான். வாதி எனது இடத்தை ஆக்கிரமித்துவிட்டதாக எழுத்துமூலமாக 3,4 பிரதிவாதிகளிடம் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவரது வீட்டிற்கு கீழ்பக்கம் சண்முகத்தேவர் இடம் என்றால் எனக்கு தெரியாது. மாடசாமிதேவர் 3,4 பிரதிவாதிகளிடமிருந்து அடகோலை எதுவும் எழுதிவாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. கங்காதேவி, மாடசாமித்தேவருக்கு கொடுத்தாக எதுவும் ஆவணம் என் வசம் இல்லை என்றால் சரியல்ல. மாடசாமி மடத்து காவலாளி என்றால் சரிதான். அவர் ஏற்கனவே சிறை சென்று வெளியே வந்து தற்போதுஇறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. வாதி இடத்திற்கு அடுத்தவடபக்கமுள்ள இடத்தை சுப்பிரமணியபிள்ளையிடமிருந்து உள்குத்தகை நான் வாங்கினேன். உள்குத்தகை ஆவணத்தை காட்டக்கூடிய ஆவணம் என் கைவசம் இல்லை என்றால் சரியல்ல, அதை நான் மடத்தில் கொடுத்துவிட்டேன். பி.வா.சா.ஆ.11,12 ஆவணத்தில் நீள அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. வேலி அமைத்து 4 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரியல்ல, 30 வருடங்கள் ஆகிவிட்டது. முள்வேலி அமைத்து 6 ஆண்டுகள் ஆகிவிட்டது. தெற்கு பக்கமுள்ள தெருவை பஞ்சாயத்திடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.குடிநீர் குழாயும், தெருவிளக்கும் தெருவில் உள்ளது என்றால் சரியல்ல. குடிநீர் குழாய் மட்டுமே உள்ளது. வாதி குத்தகைக்கு எடுத்தவிவரம் தெரியாது.

4. வாதி வீட்டிற்கு கீழ்பக்கமுள்ள இடத்திற்கு சண்முகத்தேவர் பேரன் சுந்தரராஜன் தீர்வை செலுத்திவருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் எல்கைமாலில் மேற்கில் சண்முகத்தேவர் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சுந்தரம்மாள் மனை புஞ்சைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ.7 பத்திரத்தில் கிழமேல் 27 அடி காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சர்வேயர் வைத்து அளக்கவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் அதை அகற்ற கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.